சிவாஜி கணேசன் மூத்த மகள் சாந்தி நாராயணசாமி மரணம்

சென்னை, செப்.21: சிவாஜி கணேசன் மூத்த மகள் சாந்தி நாராயணசாமி (72), உடல்நலக்குறைவு காரணமாக நேற்று அதிகாலை மரணம் அடைந்தார். அவருக்கு திரையுலகினரும், ரசிகர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர். நேற்று மாலை சாந்தி நாராயணசாமியின் இறுதிச்சடங்கு நடந்தது.

மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கமலா அம்மாள் தம்பதிக்கு சாந்தி, தேன்மொழி ஆகிய மகள்களும், நடிகர்கள் ராம்குமார், பிரபு ஆகிய மகன்களும் இருக்கின்றனர். இவர்களில் மூத்த வர், சாந்தி. முதல் பெண் குழந்தை என்பதால், சிவாஜி கணேசனுக்கு அவர் மீது அதிக பாசம் என்று சொல்வார்கள். சென்னை அண்ணா சாலையில் சிவாஜி கணேசன் கட்டிய தியேட்டருக்கு 'சாந்தி தியேட்டர்' என்று பெயர் சூட்டப்பட்டது. இப்போது அந்த தியேட்டர் இடிக்கப்பட்டு அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. சாந்தி, நாராயணசாமி திருமண விழாவில் காமராஜர், பெரியார், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், பாடகி லதா மங்கேஷ்கர் ஆகியோர் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

மு.க.ஸ்டாலின் இரங்கல்

நடிகர் திலகம் சிவாஜியே சிவாஜி கணேசனின் மகள் சாந்தி மறைவெய்தியதையடுத்து, காவேரி மருத்துவமனையில் அவரது உடலுக்கு நேற்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் இறுதி மரியாதை செலுத்தினார். அப்போது, அவரது மனைவி துர்கா ஸ்டாலின், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் எம்எல்ஏ வி.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். தொடர்ந்து, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட இரங்கல் செய்தி:

தலைவர் கலைஞரும்-நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நட்புக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர்கள். காலத்தால் கரையாத அவர்களது நட்பின் பாசம், இரு குடும்பங்களையும் தலைமுறைகள் கடந்த உறவாகப் பிணைத்திருக்கிறது. அந்த பாசப் பிணைப்பில் எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே அன்பு பாராட்டி வந்த சகோதரி சாந்தியின் மறைவு மிகுந்த வேதனையளிக்கிறது. அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். அன்புச் சகோதரியை இழந்து ஆற்றொணாத் துயரில் வாடும் அவரது கணவர் நாராயணசாமி, மகள்கள் விஜி லட்சுமி, சத்யவதி, சகோதரர்கள் ராம்குமார், பிரபு உள்ளிட்ட குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

▶ நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகள் சாந்தி மறைவெய்தியதையடுத்து, காவேரி மருத்துவமனையில் அவரது உடலுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று இறுதி மரியாதை செலுத்தினார். அருகில், துர்கா ஸ்டாலின், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் எம்எல்ஏ வி.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்டோர்.

இடைத்தேர்தலால் மக்கள் வரிப்பணம் வீண்

பதவியை ராஜினாமா செய்தவர்களிடம் பொருளாதார இழப்பை வசூலிக்க வேண்டும்

மல்லை சத்யா வலியுறுத்தல்

சென்னை, செப்.21: திராவிட வெற்றிக் கழக தலைவர் மல்லை சத்யா வெளியிட்டுள்ள அறிக்கை:

2031-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற வேண்டிய சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில், ஒரே ஆண்டில் இரண்டாவது முறையாக தேர்தலை சந்திக்கும் சூழ்நிலை ஏன், எதற்காக, யாரால் ஏற்பட்டது என்ற கேள்வி எழுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இயற்கை எய்துவது அல்லது நீதிமன்றத்தால் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெறுவது போன்ற காரணங்களால் இடைத்தேர்தல் நடைபெறுவது இயல்பானது. ஆனால், இது போன்ற காரணங்கள் இல்லாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாட்களிலேயே தனது சுயலாபத்துக்காக பதவியை ராஜினாமா செய்வதால் மக்களின் வரிப்பணம் வீணாகிறது.

எனவே, எந்தவிதமான சரியான காரணமும் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் ராஜினாமா செய்யும் நபரிடம், அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பை வசூலிப்பதுடன், குறிப்பிட்ட காலத்திற்கு அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் சுய நலகாரணங்களுக்காக பதவியை ராஜினாமா செய்து மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதை தடுக்க சட்டம் கொண்டு வர வேண்டும். சட்ட மன்ற உறுப்பினருக்கு சம்பளம், பயணப்படி உள்ளிட்ட பல சலுகைகள் கிடைக்கின்றன. 5 ஆண்டுகளில் குறைந்தபட்சம் ரூ.1.20 கோடி அளவுக்கு வருவாய் கிடைக்கும் நிலையில், அந்த பதவியை ராஜினாமா செய்வதன் மூலம் கிடைக்கும் ஆதாயம் என்ன என்ற கேள்வியும் எழுகிறது. எனவே, ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படும் அதே நபர்கள் இடைத்தேர்தலில் மீண்டும் போட்டியிட்டால், அவர்களை வாக்காளர்கள் நிராகரிக்க வேண்டும்.

இடைத்தேர்தலில் ஆட்சியாளர்களுக்கு சரியான தண்டனையை வழங்க வேண்டும்

உதயநிதி ஸ்டாலின் பேச்சு

சென்னை, செப்.21: மதுராந்தகம், தாராபுரம் பகுதியில் நடக்க இருக்கும் இடைத்தேர்தலில் ஆட்சியாளர்களுக்கு சரியான தண்டனையை வழங்க வேண்டும் என உதயநிதி ஸ்டாலின் பேசி உள்ளார்.

பூந்தமல்லி நகர இளைஞரணி அமைப்பாளர் முகம்மது ராஷிக் - மரியம் பாத்திமா ஆகியோரின் திருமணத்தை வேலப்பன் சாவடியில் எதிர்க்கட்சித் தலைவரும், திமுக இளைஞரணி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று நடத்தி வைத்தார். இதனை தொடர்ந்து மணமக்களை வாழ்த்தி பேசினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர், முன்னாள் எம்எல்ஏ ஆகிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

தமிழகம் இன்றைக்கு ஒரு சர்க்கஸ் கும்பலிடம் மாட்டிக்கொண்டு முழித்து கொண்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கு என்ன நிலையில் இருக்கு என்று உங்களுக்கு தெரியும். நேற்று முன்தினம் மட்டும் தமிழகத்தில் எட்டு படுகொலைகள் நடந்திருக்கிறது. மின்வெட்டு தமிழகத்தில் உச்சத்தில் இருக்கிறது. ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டது. ஆனால் ஒரு திட்டத்தை கூட முழுவதாக நிறைவேற்றவில்லை. முதலமைச்சர் வாயை திறப்பதே இல்லை. வாயை திறந்தால் வெறும் 'பஞ்ச்' டயலாக் தான். அதுவும் எங்களை பார்த்து பேசுவதில்லை. கேமரா எங்கு இருக்கிறது என பார்த்து, ஆங்கிள் எல்லாம் பார்த்து, சபாநாயகர் கிட்ட அனுமதி வாங்கி, 'டேக்' போகலாமா என கேட்டு, சபாநாயகர் 'ஆக்ஷன்' சொன்ன பின் முதலமைச்சர் தனது 'பஞ்ச்' டயலாக் பேசுகிறார். கடந்த நான்கு மாதமாக சட்ட ஒழுங்கு பிரச்சனை மோசமாக இருக்கு என்று நான் கேள்வி கேட்டேன். கிட்டத்தட்ட 35 நிமிடம் பேசி

> தமிழகம் இன்றைக்கு ஒரு சர்க்கஸ் கும்பலிடம் மாட்டிக் கொண்டு முழித்து கொண்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கு என்ன நிலையில் இருக்கு என்று உங்களுக்கு தெரியும். நேற்று முன்தினம் மட்டும் தமிழகத்தில் எட்டு படுகொலைகள் நடந்திருக்கிறது.

னேன். 16 கேள்விகள் முதலமைச்சரிடம் கேட்டேன். முதலமைச்சர், மூன்று மணி நேரம் எடுத்துக் கொண்டு தயாராக வாங்க. அதிகாரிகளிடம் என்ன பிரச்சனை என்று கேளுங்கள். இதற்கு என்ன தீர்வு என்னவென்று கேளுங்கள் கேட்டு பதில் சொல்லுங்கள் என நான் கேட்டேன். முதலமைச்சர் சொல்லிவிட்டு சட்டசபையை விட்டு ஓடிப் போய்விட்டார். நான் கூட தயாராகதான் ஓடிப் போகிறார். பதில்களை தயார் செய்து மூன்று நாள் கழித்து பதில் சொல்வார் என நினைத்து காத்திருந்தேன். ஆனால், நான் கேட்ட ஒரு கேள்விக்கு கூட முறையான பதில் இல்லை. 50 ஆண்டுகளுக்கு முன் நடந்த பிரச்சனை எல்லாம் இழுத்துட்டு வந்து, 'சர்க்காரியா' கமிஷன் பற்றி தெரியுமா உங்களுக்கு, மிசா கைது பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என இல்லாத, பொல்லாத பொய்களை எல்லாம் அன்று சட்டசபையில் பேசினார்.

திமுகவின் தயவில் தான் இன்று இந்த ஆட்சி நடந்து வருகிறது. அ.தி.மு.க., எம்.எல்.ஏ.,க்களை விலைக்கு வாங்குகிற வேலையில் இந்த அரசு இன்று இயங்கி உள்ளது. இப்படி விலைக்கு வாங்கிய காரணத்தால் தான், மதுராந்தகம், தாராபுரம் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த 'ரீல்ஸ்' கும்பலுக்கு வாக்களித்த கொஞ்சம், நஞ்சம் மக்களும் ஏன்டா வாக்களித்தோம் என கவலையில் உள்ளனர். இந்த ஆட்சியாளர்கள் அடிக்கின்ற கூத்தையெல்லாம், செய்கின்ற அட்டூழியங்களை எல்லாம் மக்களுக்கு தொடர்ந்து அம்பலப்படுத்த வேண்டும். அதற்கு சரியான ஒரு தண்டனையை வருகிற இடைத்தேர்தல் வாயிலாக நாம் இந்த ஆட்சியாளர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என எந்த வரிசையில் இருந்தாலும் தி.மு.க., என்றைக்கும் மக்களுக்காக களத்தில் நிற்கும். இவ்வாறு பேசினார்.

திருமாவளவன், மாணிக்கம் தாகூர், வைகோ பெயர் இடம்

தவெக நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலுக்கு பாஜ எதிர்ப்பு

உடனே ரத்து செய்யும்படி தேர்தல் ஆணையத்தில் புகார்

சென்னை, செப்.21: தமிழக பாஜ செயலாளர் கராத்தே ஆர்.தியாகராஜன் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி உள்ள புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்களில் பிரசாரம் செய்வதற்காக நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலை தமிழக தேர்தல் ஆணையம் வெளியிட்டு உள்ளது.

தவெகவின் நட்சத்திர பேச்சாளர்களாக முதல்வர் விஜய்யுடன் காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, துரை வைகோ, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் காதர் மொகிதீன், விசிக கட்சியைச் சார்ந்த ரவிக்குமார் எம்.பி, வன்னி அரசு மற்றும் சிந்தனை செல்வன் போன்ற பிற கட்சிகளின் தலைவர்கள் பெயர்கள் இடம் பெற்று உள்ளன. அந்தந்த கட்சியை சார்ந்த தலைவர்களை மட்டுமே நட்சத்திர பேச்சாளர்களாக அறிவிக்க முடியும் என்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் பிரிவு 77ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி இருக்கும்போது, தமிழக தேர்தல் ஆணையம் தவெக கொடுத்துள்ள பிற கட்சிகளின் தலைவர்கள் பெயர்கள் அடங்கிய பட்டியலை தவெக நட்சத்திர பேச்சாளர்களாக அங்கீகரித்துள்ளது. இது தேர்தல் நடத்தை விதிமுறைகளை கேலிக்கூத்தாக்கும் செயலாக உள்ளது. சட்டத்தின்படி நடக்க வேண்டிய தேர்தல் ஆணையத்தையும் சட்டத்தையும் கேலிக் கூத்தாக்கி ஆளும் கட்சியான த.வெ.க.வுக்கு ஆதரவாக செயல்படுகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தி உள்ளது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தில் நடைபெறக்கூடிய மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறுமா? என்ற கேள்விக் குறியை ஏற்படுத்தி உள்ளது.

ஏற்கனவே இதே போன்று ஆம்ஆத்மி கட்சி அதன் உறுப்பினர் அல்லாத வரை நட்சத்திர வேட்பாளராக அறிவித்த விவகாரத்தில் சர்ச்சை எழுந்து, பிறகு கட்சியின் உறுப்பினர் அல்லாதவர் நட்சத்திர பேச்சாளராக இருக்க முடியாது என்ற நிலை உருவானது. எனவே மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் பிரசாரம் செய்வதற்காக தவெகவுக்கு அங்கீகரித்துள்ள நட்சத்திர பேச்சாளர் பட்டியலை தேர்தல் ஆணையம் உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு

24 மணி நேரத்தில் 8 படுகொலைகள்; சட்டம்- ஒழுங்கு சீரழிவு

அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா? பிரேமலதா கேள்வி

சென்னை, செப். 21: தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா எம்எல்ஏ வெளியிட்ட அறிக்கை:

சிவகங்கை மாவட்டத்தில் நடந்த இரட்டைக் கொலை சம்பவம் பொதுமக்களிடையே மிகப்பெரிய அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. மதுரையில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் அருகே ஒருவர் நடுரோட்டில் விரட்டிச் சென்று வெட்டிப் படுகொலை, கிருஷ்ணகிரி அருகே டாஸ்மாக் கடையுடன் தொடர்புடைய இடத்தில் ஏற்பட்ட தகராறில் 33 வயது இளைஞர் கல்லால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த படுகொலைகளுக்கும், தமிழ் நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்ததற்கும் அரசு என்ன பதிலளிக்கிறது.

நெய்வேலி என்எல்சி திட்டங்களுக்காக விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அரசு முதலில் உறுதி செய்ய வேண்டும். முதலில் ஏற்கனவே நிலம் வழங்கிய மக்களுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், அதன் பின்னரே புதிய விளைநிலங்களை கையகப்படுத்துவது குறித்து பேசுங்கள்.

தமிழ்நாட்டில் டெங்கு பாதிப்புகளும், உயிரிழப்புகளும் நடந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே, அரசு வெறும் அறிவிப்புகளோடு நிற்காமல், களத்தில் தீவிரமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் ரூ.247.15 கோடி பயிர்க்கடன் 50,779 விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது. ஆனால், முழுமையான கடன் தள்ளுபடியே தங்களது கோரிக்கை என்று விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச் செயலகம் தொடர்பான அறிவிப்பு குறித்து மீனவர்கள் மத்தியில் அச்சமும், எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது. அந்த பகுதியின் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கவலைகளை அரசு உரிய முறையில் பரிசீலிக்க வேண்டும்.

கர்நாடக அரசை உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி மீண்டும் காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் விவசாயிகள் நலன் கருதி வலியுறுத்துவாரா?.

தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு பாதிப்பால் ஒருபுறம், டெங்குவால் பொதுமக்கள் பாதிப்பு ஒருபுறம், கொசு கடியால் மக்கள் அவதி ஒருபுறம், இந்த நிலையில் இன்றைய தமிழ்நாடு, மக்கள் கதி என்ன?. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலம் சின்னப்பூர் மற்றும் பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கொள் முதல் செய்யாததானால் மழையில் நனைந்து வீணாவதை அரசு எப்போது தடுக்கப்போகிறது?. இப்படி பல்வேறு மக்கள் பிரச்சனைகளுக்கு அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா?. இல்லையெனில் செவிடன் காதில் ஊதிய சங்கு போல இந்த அரசு என்று மக்கள் முடிவு செய்வார்கள்.

இவ்வாறு பிரேமலதா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கூடுதல் விலைக்கு மது விற்பனை தொடரும் நிலையில் டாஸ்மாக்கில் புதிய கட்டுப்பாடுகள்

டாஸ்மாக் நிர்வாகத்தில் அடுத்தடுத்து மாற்றங்கள்

சென்னை, செப்.21: தமிழகத்தில் டாஸ்மாக் மதுபானக் கடைகளில் கூடுதல் பணம் வசூலிப்பது, சில்லரை தட்டுப்பாடு, ரொக்கப் பணத்தை கையாள்வது உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் அடுத்தடுத்து புதிய நடைமுறைகளை டாஸ்மாக் நிர்வாகம் கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இனி ரூ.500 வரை மட்டுமே ரொக்கமாகவும், அதற்கு மேல் டிஜிட்டல் முறையிலும் பணம் பெற டாஸ்மாக் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் மதுபான ஆலை முதல் டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்வது வரை கணினிமயமாக்கும் திட்டம் கடந்த 2024-ம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மதுபான பாட்டிலும் கையடக்க கருவி மூலம் பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், கடைகளில் கியூ.ஆர். குறியீடு மூலம் டிஜிட்டல் பணம் செலுத்தும் வசதியும் உள்ளது.

ஆனால், தமிழகத்தில் தினமும் சராசரியாக சுமார் ரூ.150 கோடிக்கு மதுபானங்கள் விற்பனையாகும் நிலையில், 80 சதவீதத்துக்கும் அதிகமான தொகை ரொக்கமாகவே வசூலிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு மறுநாள் வங்கிகளில் செலுத்தப்படுகிறது. இதனால் பணத்தை எடுத்துச் செல்லும்போது பாதுகாப்பு பிரச்னைகளும் ஏற்படுகின்றன.

மேலும், டாஸ்மாக் இணையதளம் மூலம் மதுபானங்களை தேர்வு செய்து முன்கூட்டியே பணம் செலுத்தி வாங்கும் வசதியும் உள்ளது. ஆனால், இந்த முறையில் பணம் செலுத்தி வரும் வாடிக்கையாளர்களுக்கு மதுபானங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன. ரொக்கப் பணம் பெறுவதில் ஊழியர்கள் அதிக ஆர்வம் காட்டுவதே இதற்கு காரணம் என டாஸ்மாக் நிர்வாகம் கண்டறிந்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் ரொக்கப் பணப்புழக்கத்தை குறைத்து டிஜிட்டல் பரிவர்த்தனையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட கூடுதல் தொகை வசூலிப்பதையும், சில்லரை தட்டுப்பாட்டையும் கட்டுப்படுத்த முடியும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

டாஸ்மாக் கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட கூடுதல் தொகை வசூலிப்பது தொடர்பான புகார்கள் தொடர்ந்து எழுந்து வருகின்றன. கடந்த செப்டம்பர் மாதத்திலும் மதுபான பாட்டிலுக்கு ரூ.10 கூடுதலாக வசூலித்ததாகக் கூறி 150க்கும் மேற்பட்ட டாஸ்மாக் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. மேலும், டாஸ்மாக் கடைகளில் கூடுதல் விலை வசூலித்தால் பொதுமக்கள் காவல் துறையில் புகார் அளிக்கலாம் என்றும், புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கடந்த ஆகஸ்ட் மாதம் உத்தரவிட்டது. இதனால், கணினிமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை நடைமுறைகள் இருந்தும் கூடுதல் விலை வசூலிப்பை முழுமையாக கட்டுப்படுத்த முடியாத நிலை தொடர்வதாக பொதுமக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

டாஸ்மாக் நிர்வாகத்தில் கணினிமயமாக்கல், டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை, தானியங்கி சரக்கு விநியோகம், புதிய மதுபான வகைகள் என அடுத்தடுத்து பல மாற்றங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்வது, பில் வழங்காதது, விரும்பிய மதுபான வகைகள் கிடைக்காதது போன்ற புகார்கள் தொடர்ந்து எழும் நிலையில், புதிய தொழில்நுட்ப நடைமுறைகள் மட்டும் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை ஏற்படுத்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது. டாஸ்மாக் மூலம் அரசுக்கு கிடைக்கும் வருவாயில் கவனம் செலுத்துவதுடன், கடைகளில் நடைபெறும் விற்பனை முறைகேடுகளை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கும், பொதுமக்களிடம் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்வதற்கும் தமிழக அரசு கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

MRF INSTITUTE OF DRIVER DEVELOPMENT (MIDD)

விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வயது 20-28, 10ஆம் வகுப்பு படித்த, 160cm, உயரமுள்ள திறமையான ஓட்டுனராக வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் இளம் ஆண்கள் இதற்கு தகுதி உடையவர்கள்.

LMV பயிற்சி 6 வாரம். பயிற்சி கட்டணம் ரூபாய் 6,000/-. HMV பயிற்சி 12 வாரம். பயிற்சி கட்டணம் ரூபாய் 14,000/-. Two Wheeler பயிற்சி 4 வாரம். பயிற்சி கட்டணம் ரூபாய் 2,000/- தவணை முறையில் செலுத்தலாம். முழுநேர பயிற்சி, **ஓட்டுனர் உரிமம், பயிற்சிக்கான இதர செலவுகள் ஆகியவை பயிற்சி கட்டணத்தில் அடங்கும். அனைவருக்கும் தங்குமிடம் மட்டும் இலவசம்.**

LMV மற்றும் HMV பயிற்சி ஆரம்பம் தேதி 05 October 2026. பயிற்சிக்கான சேர்க்கை துவங்கி உள்ளது. மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து ஒவ்வொரு 6 வாரம் பின்னர் LMV பயிற்சியும், ஒவ்வொரு 12 வாரம் பின்னர் HMV பயிற்சியும் நடைபெறும்.

மேலும் நாங்கள் கார்ப்பரேட் கம்பனிகளுக்காக ஒரு நாள் புத்தாக்க பயிற்சியும் [one day refresher training] நடத்துகிறோம்.

கீழ்கண்ட விவரங்களுடன் எப்பொழுது வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். பெயர், வயது, முகவரி, தொலைபேசி எண், படிப்பு, உயரம், உரிமம் நகல் etc.

விரைந்து செயல்படுங்கள். முதலில் சேருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஓட்டுனரை பணியில் அமர்த்த மற்றும் ஒரு நாள் புத்தாக்க பயிற்சியில் அனுப்ப விரும்பும் நிறுவனங்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்.

MRF INSTITUTE OF DRIVER DEVELOPMENT
NO.1/16, MADHAVARAM HIGH ROAD,
VADAGARAI, REDHILLS, CHENNAI - 600 052,
TEL: 044 - 2632 3317,
MOB: 98411 51745, 98843 79078.
Email: mrf.institute@mrfmail.com,
gerard.correya@mrfmail.com

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: எண்.274, 2 ஆவது தளம், காந்தி ரோடு, லஜ்பிபுரம், மேற்கு தாம்பரம், சென்னை-600045, தமிழ்நாடு.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் விதிவிலக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. நிரல் (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக 23.10.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்து விசாரிக்கவும் / நிர்ணய வழக்குகள் ஏதேனும் (K)
5	கடன் எண். LAP05232000000500 2611 ரமேஷ் (கடன்தாரர்), மாரியம்மாள் (உப கடன்தாரர்)	11.02.2026 11.02.2026 தேதியின்படி ரூ.5,49,922/- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்திரண்டு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 17.35% வட்டி.	கையக	எருசலேம் தர்ம நகர், மலையன்குளம் கிராமம், மலையன்குளம் ஊராட்சி, குருவிக்குளம் ஊராட்சி ஒன்றியம், சங்கரன்கோவில் சார்பதிவாளர் அலுவலக எல்லை, தென்காசி பதிவு மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், தென்காசி மாவட்டம், பழைய எண்.3/38A, புதிய கதவு எண்.3/18, அயன் புஞ்சை சர்வே எண் 589-இல் அமைந்துள்ள, 4 ஏக்கர் 20 சென்ட் நிலப்பரப்பிலிருந்து வடக்குப் பகுதியில் 3 சென்ட் = 1306.8 சதுர அடி, 121.404 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள நிலம் மற்றும் வீடு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கு: சேகநாதபுரம் செல்லும் கிழக்கு மேற்கு சாலை; தெற்கு: இன்பராஜுக்குச் சொந்தமான வீடு; கிழக